முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.09.2024) சென்னை, தியாகராயர் நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்திற்கு நேரில் சென்று அண்மையில் மறைவு எய்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், சென்னை மாநகராட்சி நிலைகுழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.09.2024) சென்னை, தியாகராய நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்திற்கு நேரில் சென்று அண்மையில் காலமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி. கே. ரங்கராஜன் சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், சென்னை மாநகராட்சி நிலைகுழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர் சா.சி.சிவசங்கரின் ‘‘கலைஞர் இல்லத்தில்’’

இல்லம்தோறும் கழக கொடியேற்று விழா தொடக்கம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், செப், 16-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழாவை முன்னிட்டு. கழகத்தின் உடன் பிறப்புகள் ஒவ்வொருவரும், ‘இல்லந்தோறும் கழகக் கொடி’யை ஏற்றிட வேண்டுமென கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, அரியலூர், ராஜாஜி நகரில் உள்ள அமைச்சர் சா.சி.சிவசங்கரின் “கலைஞர் இல்லத்தில்” கழகக் கொடியை, கழகத்தின் மூத்த முன்னோடி யான நகரப் பொருளாளர் மா. இராஜேந்திரன் ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், நகர செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயி கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், நகர்மன்ற துணைத்தலைவர் கலிய மூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி.செல்வம், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் தங்கை.எழில்மாறன், கழக வழக்கறிஞர் கதிரவன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண் ராஜா, நகர கழக நிர்வாகிகள் மாலா தமிழரசன், குணா, குமார், உத்திராபதி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துறை அமைச்சர் சா.சி சிவசங்கர், மின்சார பேருந்துகளைப் பொறுத்தவரை டெண்டர் விடப்பட்டுள்ளது. பல்வேறு நிறு வனங்கள் கலந்து கொண்டுள்ளன. டெண்டரின் அடிப்படையில் எந்த நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமோ அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு மின்சார பேருந்துகள் இயக்கப்படும்.

மினி பேருந்துகள் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் பல உட்கிராமத்திற்கும் பேருந்து வசதி தேவை என்ற அடிப்படையில் தொடங்கி வைத்தார். பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் அவற்றிற்கான போக்குவரத்து வசதிகளை சரியாக வழங்காததால் மினி பேருந்து சேவை பாதிக்கப்பட்டது. எனவே குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களிலும் பேருந்து சேவை தேவை என்ற கோரிக்கை பொதுமக்களால் வைக்கப்பட்டு வருகிறது. எனவே மீண்டும் மினி பேருந்திற்கு உயிர் கொடுத்து உள்ளார்கள். இதற்கான கொள்கை வரைவு திட்டம் முதலமைச்சர் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. முதலமைச்சர் ஒப்புதல் கொடுத்த பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த பாதையில் மினி பேருந்துகள் இயக்க தேவை உள்ளதோ அந்த பாதையில் மினி பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விசிக மாநாட்டிற்கு அதிமுகவும் கலந்து கொள்ளலாம் என விசிக தலைவர் திருமாவளவன் கூறியது குறித்து கேட்டபோது விசிக மாநாட்டை பொறுத்தவரை அதன் தலைவர் திருமாவளவன் எல்லா கட்சியையும் தான் அழைக்கிறார் திமுக உள்ளிட்ட இந்த கொள்கையில் ஒத்த கருத்துடைய அனைத்து கட்சிகளும் கலந்து கொள்ளலாம் என கூறியுள்ளார்

அழைப்பு என்று விடுத்த பிறகு அது குறித்து ஆய்வு செய்யலாம் என கூறினார் விசிக மாநாட்டில் அதிமுக கலந்து கொள்வதற்கு தார்மீக உரிமை உண்டா என்ற கேள்விக்கு தமிழகத்தில் மதுவிலக்கை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் மதுக்கடையை கொண்டு வந்தவர் எம்.ஜி.ஆர்.

அதனை அரசு நிறுவனமாக்கியவர் ஜெயலலிதா. எனவே இது குறித்து எல்லாம் அவர்கள் தான் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்.

தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்திற்கு புதிய முதலீடுகளை கொண்டு வரும் முயற்சிகளில் இறங்கியுள்ளார். அதன் ஒரு பகுதியாக பல்வேறு வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு தற்பொழுது அமெரிக்காவில் பயணத்தை மேற்கொண்டுள்ளார். ஒவ்வொரு நாளும் பல்வேறு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன பல ஆயிரக்கணக்கான கோடிகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டை புதிய முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்லும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இதன் ஒரு பகுதியாகவே பெரம்பலூர் மாவட்டத்தில் சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. அதே போல் குன்னம் தொகுதியிலும் அரியலூர் மாவட்டத்தில் உள்ள மகிமைபுரம் பகுதியிலும் புதிய சிப்காட் தொழிற்சாலை அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் தொழில் வளர்ச்சி பெருகுவதோடு வேலைவாய்ப்பும் பெருகும்

இதுபோன்ற தொழிலை தொடங்க இந்த வெளிநாட்டு பயணம் மிகப்பெரிய வெற்றிகரமான பயணமாக அமையும் என அமைச்சர் கூறினார்.

உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பில் ஆய்வக கட்டிடம்!

உளுந்தூர்பேட்டை, செப்.16-

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள ட்ராமா கேர் கட்டிடத்தில் முதல் தளத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகக் கட்டிடம் கட்டும் பணி துவக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது, இவ்விழாவில் வடக்கு மாவட்ட கழக அவை தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார்.

இதில் நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, பொதுப் பணித்துறை உதவி செயற்பொறியாளர் ராஜீவ், அரசு மருத்துவர் சதா வெங்கடேசன், நகர மன்ற உறுப்பினர் முருகவேல், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பத்மநாபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் அறிஞர் அண்ணாவின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு நகர தி.மு.க. அவைத் தலைவரும், நகர்மன்ற உறுப்பினருமான துரை சீனிவாசன், அண்ணா படத்திற்கு மாலை அணிவித்தார். உடன் நகர துணை செயலாளர் நந்தா தேவி, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் பழக்கடை ஜெ.தமின், நகர திமுக நிர்வாகிகள் என்.ஜெயக்குமார், பி.சந்திரசேகர் ஆகியோர் உள்ளனர்.

உத்தராகண்ட் நிலச்சரிவில் சிக்கிய தமிழர்களை மீட்க

தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை!

தொலைபேசியில் தொடர்பு கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, செப். 16-

உத்தராகண்ட் மாநிலத்தில் சுற்றுலாவாகச் சென்ற கடலூரைச் சேர்ந்த 30 தமிழர்கள் அங்கு ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியுள்ளனர். இது குறித்து தகவலறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவர்களை மீட்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அங்கு பாதுகாப்பாக உள்ள ஒருவரிடம் அவர் தொலைபேசியில் பேசினார்.

இது தொடர்பாக உத்தராகண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய தமிழர்களை மீட்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

உத்தராகண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய தமிழர்களை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

அங்கு பாதுகாப்பாக உள்ள தமிழர்களில் ஒருவரான திருமிகு. பராசக்தி அவர்களைத் தொடர்புகொண்டு பேசினேன்.

பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நலமுடன் தங்களது ஊருக்குத் திரும்ப அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

“விடுதலைப் போராட்ட வீரராக நாட்டின் விடுதலைக்கும், அமைச்சராக மாநிலத்தின் வளர்ச்சிக்கும், சமூகநீதிக் களத்தில் வன்னியர் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டவர் ஐயா எஸ்.எஸ்.ராமசாமி படையாட்சியார் அவர்கள்”

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

இராமசாமி படையாட்சியார் அவர்களின்
107ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்

இராமசாமி படையாட்சியார்
அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

ஸ்கேன் செய்யுங்கள் SCAN ME!
https://memorial.tn.gov.in

நாள் : 16.9.2024, திங்கட்கிழமை | நேரம் : காலை 9.30 மணி
இடம் : ஹால்டா சந்திப்பு, அண்ணா சாலை, கிண்டி, சென்னை

செ.ம.தொ.இ./945/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in இயக்குநர் செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009